# மகளிர் தினம்: ‘மகளிர் நலன் போற்றும் முதலவருக்கு நன்றி’ தெரிவித்து கோலங்கள்!































மகளிருக்கு மாதம் 1000 ரூபாய் வழங்கப்படும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, விடியல் பயணத் திட்டம், ஊதியத்துடன் கூடிய 12 மாதங்கள் பேறுகால விடுப்பு, பெண்கள் தடையின்றி உயர்கல்வி பெற புதுமைப்பெண் திட்டம், மகளிர் சுய உதவிக்குழுக்களின் கடன் தள்ளுபடி, தமிழ்நாடு மகளிர் கொள்கை 2024 என முதலமைச்சர் அறிவித்துச் செயல்படுத்தி வரும் மகளிருக்கான திட்டங்கள் எண்ணற்றவை.

இத்திட்டங்களை எளிய வகையில் மகளிருக்கு எடுத்துச் சொல்லும் வகையிலும், முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் ‘மகளிர் நலன் போற்றும் முதலமைச்சருக்கு நன்றி’ என எழுதிக் கோலமிடும் வகையில் பெண்களை ஊக்குவிக்க வேண்டும் என தலைமைக் கழகத்திலிருந்து அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இன்று மாநிலத்தின் பல்வேறு இடங்களில் மகளிர் தங்கள் வீட்டு முன்பாக முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கோலமிட்டு வருகின்றனர். தி.மு.க. சார்பில் சமூக வலைத்தளத்திதும் #DMK4Women என்ற ஹேஷ்டேக் வழியாகப் பதிவுகள் இடப்பட்டன. தி.மு.க. சார்பில் பல்வேறு இடங்களில் போஸ்டர்களும் ஒட்டப்பட்டுள்ளன.



